**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.23/2022**
**Prosecution Witnesses: 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : **குலாம்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **அசன் முகமது** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(09.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் ஆண்டிபட்டி உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளராக பணிபுரிந்து கடந்த 31.05.2018ல் பணி ஓய்வு பெற்று தேனி மாவட்டம் பழனிசெட்டிபட்டியில் தற்போது குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 01.01.2010 அன்று நான் திருநகர் வட்டக்காவல் ஆய்வாளராக பணி புரிந்த போது திருநகர் காவல் நிலைய குற்ற எண். 1/2010 பிரிவுகள் 279,337,304(எ) இதச வழக்கின் முதல் விசாரணையை திருப்பரங்குன்றம் சார்பு ஆய்வாளர் திரு.சோமசுந்தரம் என்பவரால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கு விசாரணைக்காக வழக்கு கோப்பு என்னிடம் அனுப்பப்பட்டதை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே நாள் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சமுத்திரம் மற்றும் பாண்டி ஆகியோர்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. மேலும் சம்பவயிடத்தில் வைத்து இறந்துபோன விஜயா என்பவரின் பிரேதத்தின் மீது விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஐ தயார் செய்தேன். இறந்து போன நபருக்கு பிரேத பரிசோதனை செய்ய மு.நி.கா.1115 முருகேசன் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். அதன் தொடர்ச்சியாக மருத்துவமனையில் வைத்து சாட்சிகள் பாண்டி, சமுத்திரகனி, நடேசன், மணிமுத்து, ராமசந்திரன், நாகேந்திரன் மற்றும் மாலதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தில் ஈடுபட்ட அரசு பேருந்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். அதே தேதியில் 19.00 மணியளவில் எதிரி இளையராஜா என்பவரை காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். 02.01.2010 அன்று இந்த வழக்கில் காயம் பட்ட மற்றொரு நபரான ராதாகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டதால் அவர் காயச்சான்று எதுவும் பெறவில்லை. அதன் பின்பு இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 67 B 6273 என்ற இருசக்கர வாகனத்தையும் 07.01.2010 அன்று மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பினேன். 25.11.2010 அன்று இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களையும் தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அரசு பேருந்தின் வாகன அறிக்கை அ.சா.ஆ.7 மற்றும் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பிரேத பரிசோதனை செய்த ராகவா கணேசனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சடலக்கூராய்பு அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் இந்த வழக்கின் எதிரி இளையராஜாவை பணி நியமனம் செய்த திருமங்கலம் TNSTC பணிமனையில் பொறுப்பு அலுவலராக இருந்த ராஜாராம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி தான் வாகனத்தை விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தை ஓட்டியவர் என உறுதிசெய்தேன். அதன் பின்பு மு.நி.கா 1115 முருகேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் சோமசுந்தரம் என்பவரை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 02.01.2010 அன்று இந்த வழக்கில் காயம்பட்ட மற்றொரு நபரான ராதாகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் சதாசிவம் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். ராதாகிருஷ்ணன் என்பவரது காயச்சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்பு எனது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279,337,304(A) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் கு.வி: இல்லை**